DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. - 151/2024

Prosecution PW - 19

| Name | திரு. மோகன் ராஜ் | Occupation | |
|---|---|---|---|
| Husband/Father Name | | Village | |
| Taluk | | Age | |
| Date | 24.02.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 to A6, A8 to A10 Present. A7 absent, 355 BNSS petition filed and allowed.

முதல் விசாரணை

நான் தஞ்சாவூர் வண்டிக்காரதெருவில் குடியிருந்து வியாபாரம் செய்து வருகிறேன். சாட்சி தினேசை தெரியாது. எதிரி அழகேசனை தெரியாது. வழக்கு குறித்து எதுவும் தெரியாது. சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு பசுபதிகோவிலில் நின்றுகொண்டிருந்தபோது போலிசாா் என்னிடம் இரண்டு கையெழுத்துக்கள் வாங்கினார்கள். காட்டப்படும் 02.04.2024ம் தேதியிட்ட எதிரி அழகேசனின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைபற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். எதற்காக போட்டேன் என்று தெரியாது. அந்த கையெழுத்துக்கள் மட்டும் அதசாஆ **9** மற்றும் **10**. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலிசார் விசாரணையில், 01.04.2024ம்தேதி மாலை 5 மணிக்கு பசுபதிகோவில் விஏஓ அலுவலத்தில் எதிரில் செந்தில் குமார் என்பவரிடம் தகராறு செய்து கொண்டிருந்தபோது ஆலிவாய்க்காலை சேர்ந்த ஜெயகுமார் என்பவரை அடித்து காயப்படுத்தி இறந்துபோன வழக்கில் கைது செய்யப்பட்ட எதிரி அழகேசனை போலிசார் என் முன்பாகவும் சாட்சி தினேஷ் முன்பாக விசாரிக்க அவர் தாமாக முன் வந்து ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதில் சாட்சிகளாக நானும் தினேசும் சாட்சி கையொப்பம் போட்டோம் என்றும் பின்னர் எதிரி அழசேகன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி அழகேசன் எங்களையும் போலிசாரையும் அழைத்து கொண்டு பசுபதி கோவில் காளிதாஸ் தென்னந்தோப்பிற்கு அழைத்து சென்று எடுத்து ஆஜர் செய்த 5 மூங்கில் துண்டுகளையும் எதிரி அழகேசன் போட்டிருந்த இரத்த கறை படிந்த வெள்ளை நிற முழுக்கை சட்டையும் கட்டம்போட்ட ஊதா நிற கைலி ஒன்றையும் போலிசார் என் முன்பாகவும் தினேசன்

முன்பாகவும் மகசரில் கைபற்றி அதில் நானும் தினேசும் கையொப்பம் போட்டு விட்டு உண்மைக்கு மாறாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>

இல்லை

நான் சொல்ல என் உத்திரவுபடி தட்டச்சிடப்பட்டு

என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. - 151/2024

Prosecution PW -20

| | | |
|---|---|---|
| Name | திரு. மணிவேல் | Occupation |
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 24.02.2025 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 to A6, A8 to A10 Present. A7 absent, 355 BNSS petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u>

நான் பசுபதி கோவிலில் குடியிருந்து விவசாய வேலை பார்க்கிறேன். சாட்சி முகமது ரபீக் தெரியும். எதிரிகள் மனோகரன், கென்னடி என்கிற விஜயகுமாரை தெரியாது. வழக்கு குறித்து எதுவும் தெரியாது. காட்டப்படும் 12.04.2024ம் தேதியிட்ட மனோகரன் கொடுத்த ஒப்புதல்வாக்குமூலம் மற்றும்கைபற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்துக்கள் மட்டும் அதசாஆ 11 மற்றும் 12. காட்டப்படும் 12.04.2024ம் தேதியிட்ட கென்னடி என்கிற விஜயகுமார் கொடுத்த ஒப்புதல்வாக்குமூலம் மற்றும் கைபற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்துக்கள் மட்டும் அதசாஆ 13 மற்றும் 14. எதற்காக போட்டேன் என்று தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலிசார் விசாரணையில், 12.04.2024ம் தேதியன்று மாலை சுமார் 5 மணிக்கு நானும் பசுபதி கோவிலை சேர்ந்த முகமது ரபீக் என்பவரும சொந்த வேலையாக வெல்டிங் வேலைக்கு சென்றபோது அங்கு வந்தஅய்யம்பேட்டை காவல் ஆய்வாளர் 01.04.2024ம்தேதி பசுபதி கோவில் விஏஓ அலுவலத்தில் நடந்த தகராறில் ஆலிவாய்க்காலை சேர்ந்த ஜெயகுமார் இறந்துபோன வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் மனோகரன், கென்னடி என்கிற விஜயகுமார் ஆகியோர் காவல்நிலைய விசாரணையில் வைத்திருப்பதாகவும், காவல் நிலையத்தில் வைத்திருப்பவர்களை அடையாளம் காட்டி எதிரி மனோகரை விசாரிக்க அவர் தாமாக முன் வந்து கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தை அந்த ஒப்புதல்வாக்கமூலத்தின் அடிப்படையில் எங்களையும் மனோகரையும் அழைத்து கொண்டு தஞ்சாவூர் செல்லும் பஸ்ஸடாப் அருகே மாலை 6.15 மணிக்கு எதிரி மனோகரன் எடுத்து ஆஜர் செய்த மூங்கில் கட்டையை மகசரில் ஆய்வாளர் கைபற்றினார் என்றும் அதில் நானும் முகமது ரபீக் கையெழுத்து போட்டோம் என்றும் பின்னர் எதிரி கென்னடி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்பாகவும் முகமது ரபீக் முன்பாகவும் ஆய்வாளர் பதிவு செய்தார்என்றும் பின்னர் எங்களையும்

கென்னடியும் அழைத்து கொண்டு பஸ்ஸடாப் அருகே 8.30 மணிக்கு வந்து எங்கள் முன்னிலையில் விஜயகுமார் எடுத்து ஆஜர் செய்த மூங்கில் கட்டை ஒன்றை மகசரில் கைபற்றினார் என்றும் அந்த மகசரில் நானும் முகமது ரபீக் கையெழுத்து போட்டுவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>

இல்லை

ஒம்/ஜி.சுந்தரராஜன்

அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. - 151/2024

Prosecution PW -21

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. முகமது ரபீக் | Occupation | |
| Husband/Father Name | | Village | |
| Taluk | | Age | |
| Date | 24.02.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 to A6, A8 to A10 Present. A7 absent, 355 BNSS petition filed and allowed.

முதல் விசாரணை

நான் பசுபதி கோவிலில் குடியிருந்து விவசாய வேலை பார்க்கிறேன். சாட்சி மணிவேலை தெரியும். எதிரிகள் மனோகரன், கென்னடி என்கிற விஜயகுமாரை தெரியாது. வழக்கு குறித்து எதுவும் தெரியாது. காட்டப்படும் 12.04.2024ம் தேதியிட்ட மனோகரன் கொடுத்த ஒப்புதல்வாக்குமூலம் மற்றும் கைபற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது அல்ல. காட்டப்படும் 12.04.2024ம் தேதியிட்ட கென்னடி என்கிற விஜயகுமார் கொடுத்த ஒப்புதல்வாக்குமூலம் மற்றும் கைபற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது அல்ல. எதற்காக போட்டேன் என்று தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலிசார் விசாரணையில், 12.04.2024ம் தேதியன்று மாலை சுமார் 5 மணிக்கு நானும் பசுபதி கோவிலை சேர்ந்த மணிவேல் என்பவரும சொந்த வேலையாக வெல்டிங் வேலைக்கு சென்றபோது அங்கு வந்தஅய்யம்பேட்டை காவல் ஆய்வாளர் 01.04.2024ம்தேதி பசுபதி கோவில் விஏஓ அலுவலத்தில் நடந்த தகராறில் ஆலிவாய்க்காலை சேர்ந்த ஜெயகுமார் இறந்துபோன வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் மனோகரன், கென்னடி என்கிற விஜயகுமார் ஆகியோர் காவல்நிலைய விசாரணையில் வைத்திருப்பதாகவும், காவல் நிலையத்தில் வைத்திருப்பவர்களை அடையாளம் காட்டி எதிரி மனோகரை விசாரிக்க அவர் தாமாக முன் வந்து கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தை அந்த ஒப்புதல்வாக்கமூலத்தின் அடிப்படையில் எங்களையும் மனோகரையும் அழைத்து கொண்டு தஞ்சாவூர் செல்லும் பஸ்ஸடாப் அருகே மாலை 6.15 மணிக்கு எதிரி மனோகரன் எடுத்து ஆஜர் செய்த மூங்கில் கட்டையை மகசரில் ஆய்வாளர் கைபற்றினார் என்றும் அதில் நானும் மணிவேல் கையெழுத்து போட்டோம் என்றும் பின்னர் எதிரி கென்னடி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்பாகவும்

மணிவேல் முன்பாகவும் ஆய்வாளர் பதிவு செய்தார்என்றும் பின்னர் எங்களையும் கென்னடியும் அழைத்து கொண்டு பஸ்ஸடாப் அருகே 8.30 மணிக்கு வந்து எங்கள் முன்னிலையில் விஜயகுமார் எடுத்து ஆஜர் செய்த மூங்கில் கட்டை ஒன்றை மகசரில் கைபற்றினார் என்றும் அந்த மகசரில் நானும் மணிவேல் கையெழுத்து போட்டுவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

இல்லை

ஒம்/ஜி.சுந்தரராஜன்

அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. - 151/2024

Prosecution PW -22

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. தெட்சிணாமுர்த்தி | Occupation | |
| Husband/Father Name | | Village | |
| Taluk | | Age | |
| Date | 24.02.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 to A6, A8 to A10 Present. A7 absent, 355 BNSS petition filed and allowed.

முதல் விசாரணை

நான் நல்லிசேரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி ரிஷப்பை தெரியும். எதிரிகளை தெரியும். எதிரி ராஜீவ் காந்தியை தெரியும். வழக்கு குறித்து எதுவ் தெரியாது. சம்பவத்தின்போது நான் ஊரில் இல்லை. போலிசார் சாட்சியாக போட்டிருப்பதாக சொன்னார்கள். எதற்காக என்று தெரியாது. காட்டப்படும் சரண்ராஜ், சதாசிவம், முத்து என்கிற முத்து ராஜா, ராஜ்வ் காந்தி ஆகியோர்களின் ஒப்புதல்வாக்குமுலத்தில் உள்ள கையெழுத்துக்கள என்னுடையது அல்ல. காட்டப்படும் சரண்ராஜ், சதாசிவம், முத்து என்கிற முத்து ராஜா,ஆகியோர்களின் கைபற்றதல் மகசரில் உள்ள கையெழுத்து என்னுடயது அல்ல. போலிசர் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலிசார் விசாரணையில்,கடந்த 13.04.2024ம் தேதி காலை 5.30 மணியளவில் நானும் எனது ஊரை சேர்ந்த ரிஷப் என்பவரும் சொந்த வேலையாக பசுபதிகோவில் புள்ளமஙகை கோவில் தெருவில் செல்வதற்காக அய்யம்பேட்டை காவல்நிலையம் வழியாக வந்தபோது ஆய்வாளர் அவர்கள் எங்கள் இருவரையும் அழைத்து 01.04.2024ம் தேதி பசுபதி கோவில் விஏஓ அலுவலம் எதிரே நடந்த தகராறில் ஜெயகுமார் என்பவர் கொலைசெய்யப்பட்டு இறந்துபோன வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் சரண்ராஜ் என்கிற சரண், சதாசிவம், முத்து என்கிற முத்துராஜ், ராஜ்வ் காந்தி ஆகியோர்களை காவல்நிலையத்தில் விசாரணைக்கு வைத்திருப்பதாகவும் ஆய்வாளர் அவர்களை அடையாளம் காண்பித்து எதிரி சரண்ராஜ் என்ற சரண், சதாசிவம், முத்து என்கிற முத்துராஜ், ஆகியோர்களை விசாரிக்க அவர்கள் தனிதனியாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை போலிசார் என் முன்பாகவும் ரிஷப் முன்பாகவும் பதிவு செய்தார் என்றும் எதிரி சரண் ராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்கமூலத்தின்

அடிப்படைடியல் பசுபதி கோலில் மெயின் ரோட்டில் தஞ்சாவூர் செல்லும் பஸ்ஸடாப்பில் எதிரி எடுத்து ஆஜர் செய்த மூங்கில் கட்டையை 6.45 மணிக்கு மகசரில் கைபற்றியதாகவும், அதில் நானும் ரிஷப்பும் சாட்சியாக கையொப்பம்போட்டோம் என்றும் எதிரி சதாசிவம் கொடுத்த ஒப்புதல் வாக்கமூலத்தின் அடிப்படைடியல் பசுபதி கோலில் மெயின் ரோட்டில் தஞ்சாவூர் செல்லும் பஸ்ஸடாப்பில் எதிரி எடுத்து ஆஜர் செய்த மூங்கில் கட்டையை 09.30 மணிக்கு மகசரில் கைபற்றியதாகவும், அதில் நானும் ரிஷப்பும் சாட்சியாக கையொப்பம்போட்டோம் என்றும் எதிரி முத்து என்கிற முத்துராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்கமூலத்தின் அடிப்படைடியல் பசுபதி கோலில் மெயின் ரோட்டில் தஞ்சாவூர் செல்லும் பஸ்ஸடாப்பில் எதிரி எடுத்து ஆஜர் செய்த மூங்கில் கட்டையை 11.45 மணிக்கு மகசரில் கைபற்றியதாகவும், அதில் நானும் ரிஷப்பும் சாட்சியாக கையொப்பம்போட்டோம் என்றும் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>

இல்லை

ஒம்/ஜி.சுந்தரராஜன்

அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. - 151/2024

Prosecution PW -23

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. ரிஷப் | Occupation | |
| Husband/Father Name | | Village | |
| Taluk | | Age | |
| Date | 24.02.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 to A6, A8 to A10 Present. A7 absent, 355 BNSS petition filed and allowed.

முதல் விசாரணை

நான் நல்லிசேரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி தெட்சிணாமூர்த்தியை தெரியும். எதிரிகளை தெரியாது. வழக்கு குறித்து எதுவும் தெரியாது. காட்டப்படும் சரண்ராஜ், சதாசிவம், முத்து என்கிற முத்து ராஜா, ராஜ்வ் காந்தி ஆகியோர்களின் ஒப்புதல்வாக்குமுலத்தில் உள்ள கையெழுத்துக்கள என்னுடையது அல்ல. காட்டப்படும் சரண்ராஜ், சதாசிவம், முத்து என்கிற முத்து ராஜா,ஆகியோர்களின் கைபற்றதல் மகசரில் உள்ள கையெழுத்து என்னுடயது அல்ல. போலிசர் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலிசார் விசாரணையில்,கடந்த 13.04.2024 ம் தேதி காலை 5.30 மணியளவில் நானும் எனது ஊரை சேர்ந்த தெட்சிணாமூர்த்தி என்பவரும் சொந்த வேலையாக பசுபதிகோவில் புள்ளமஙகை கோவில் தெருவில் செல்வதற்காக அய்யம்பேட்டை காவல்நிலையம் வழியாக வந்தபோது ஆய்வாளர் அவர்கள் எங்கள் இருவரையும் அழைத்து 01.04.2024 ம் தேதி பசுபதி கோவில் விஏஓ அலுவலம் எதிரே நடந்த தகராறில் ஜெயகுமார் என்பவர் கொலைசெய்யப்பட்டு இறந்துபோன வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் சரண்ராஜ் என்கிற சரண், சதாசிவம், முத்து என்கிற முத்துராஜ், ராஜ்வ் காந்தி ஆகியோர்களை காவல்நிலையத்தில் விசாரணைக்கு வைத்திருப்பதாகவும் ஆய்வாளர் அவர்களை அடையாளம் காண்பித்து எதிரி சரண்ராஜ் என்ற சரண், சதாசிவம், முத்து என்கிற முத்துராஜ், ஆகியோர்களை விசாரிக்க அவர்கள் தனிதனியாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை போலிசார் என் முன்பாகவும் தெட்சிணாமூர்த்தி முன்பாகவும் பதிவு செய்தார் என்றும் எதிரி சரண் ராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்கமூலத்தின் அடிப்படிடியல் பசுபதி கோலில் மெயின் ரோட்டில் தஞ்சாவூர் செல்லும்

பஸ்ஸடாப்பில் எதிரி எடுத்து ஆஜர் செய்த மூங்கில் கட்டையை 6.45 மணிக்கு மகசரில் கைபற்றியதாகவும், அதில் நானும் தெட்சிணாமூர்த்தி சாட்சியாக கையொப்பம்போட்டோம் என்றும் எதிரி சதாசிவம் கொடுத்த ஒப்புதல் வாக்கமூலத்தின் அடிப்படைடியல் பசுபதி கோலில் மெயின் ரோட்டில் தஞ்சாவூர் செல்லும் பஸ்ஸடாப்பில் எதிரி எடுத்து ஆஜர் செய்த மூங்கில் கட்டையை 09.30 மணிக்கு மகசரில் கைபற்றியதாகவும், அதில் நானும் தெட்சிணாமூர்த்தி சாட்சியாக கையொப்பம்போட்டோம் என்றும் எதிரி முத்து என்கிற முத்துராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்கமூலத்தின் அடிப்படைடியல் பசுபதி கோலில் மெயின் ரோட்டில் தஞ்சாவூர் செல்லும் பஸ்ஸடாப்பில் எதிரி எடுத்து ஆஜர் செய்த மூங்கில் கட்டையை 11.45 மணிக்கு மகசரில் கைபற்றியதாகவும், அதில் நானும் தெட்சிணாமூர்த்தி சாட்சியாக கையொப்பம்போட்டோம் என்றும் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>

இல்லை

ஒம்/ஜி.சுந்தரராஜன்

அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்